*12*

## *திறவுகோல் வசனம்: மாற்கு 14:22-26*

# ஜெபங்கள், பாடல்கள் மற்றும் வேதவசனங்கள்

*கர்த்தருடைய இராப்போஜனத்திற்கு முன், பாடல்கள், வேதவசனங்கள் மற்றும் விளக்கங்கள் ஏற்படுத்துதல் ஆகியவற்றைத் தேர்ந்து கொள்வதில் ஒரு சபைக்குழுமத்தின் உறுப்பினர்கள், தேவனுடைய அளவீடுகளுக்குப் புறம்பாக இராதவரையில், தங்கள் சொந்த முடிவுகளையும் முன்னுரிமைகளையும் பயன்படுத்த முடியும். கர்த்தருடைய இராப்போஜனத்திற்கான இந்தத் தயாரிப்புப் பற்றி வேதாகமம் விபரங்கள் எதையும் தருவதில்லை. அவைகள் கவனநிறைவுடன் ஆழந்து சிந்திக்கப் பட்டும் தேர்ந்தெடுக்கப்பட்டும் இருந்தால், அவைகள் கர்த்தருடைய மரணத்தின்மீது நினைவுகூருதலை (பந்தியில்) பங்கேற்பவர்கள் அதிகமுழுநிறைவாகக் கவனம்குவிக்க உதவக்கூடும்.*

*பந்திமேஜையில் வழிநடத்துபவர்களுக்கு இராப்போஜனத்திற்கான தகுந்த ஏற்பாடுகள் செய்யப் போதுமான காலம் தரப்பட வேண்டும். இந்த ஊழியத்தின் முக்கியத்துவம் மற்றும் ஈர்ப்புத்தன்மை ஆகியவற்றின் காரணமாக, ஒவ்வொரு விஷயமும் முன்னதாகவே ஆழ்ந்து சிந்திக்கப்பட்டு தயார் செய்யப்பட வேண்டும். ஒரு பிரசங்கியார் ஒரு செய்தியை முன்வைக்க வேண்டும் என்பதைக் கடைசி நிமிடத்தில் அறிபவராக இருக்கக் கூடாது.*

## ஜெபங்கள்

*இயேசு அப்போஸ்தலர்களுக்கு அப்பத்தைப் பரிமாறுவதற்கு முன்னர் ஒரு நன்றிசெலுத்தும் ஜெபத்தையும் அவர்களுக்குத் திராட்சரசத்தைத் தருவதற்கு முன்னர் இன்னொரு ஜெபத்தையும் ஏறெடுத்தார் (மத்தேயு 26:26, 27; 1 கொரிந்தியர் 11:23-25). இது கர்த்தருடைய பந்தியை நடத்துபவர்களுக்கு ஒரு உதாரணமாகப் பயன்பட வேண்டும். அவரது ஜெபங்களின் மிகச்சரியான வார்த்தை அமைப்பை வேத வசனங்கள் வெளிப்படுத்துவதில்லை, ஆனால் அவர் கூறிய ஜெபங்களின் வகையை நாம் அறிகிறோம். அவர் அப்பத்தை (மத்தேயு 26:26; மாற்கு 14:22) மற்றும் பாத்திரத்தை (1 கொரிந்தியர் 10:16) "ஆசீர்வதித்தது" பற்றியும், அவர் அப்பத்திற்காக (லுக்கா 22:19) மற்றும் பாத்திரத்திற்காக (மத்தேயு 26:27; மாற்கு 14:23; லூக்கா 22:17) "நன்றி" செலுத்தியது பற்றியும் நாம் வாசிக்கிறோம்.*

*"நன்றிகள்" மற்றும் "ஆசீர்வதித்தல்" என்ற சொற்றொடர்கள் ஒன்றுக்குப் பதில் இன்னொன்றாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்த சந்தர்ப்பப் பொருளில் "ஆசீர்வதித்தல்" என்பது, மதச்சடங்கு ஒன்றின் விளைவாக "பரிசுத்தமாக்குதல்" என்று அர்த்தப்படுவதில்லை, ஆனால் அதற்கு மாறாக "தேவனுடைய தயவுகளுக்காக மதிப்பை வெளிப்படுத்துதல்" என்ற விளக்கமே சரியாக உள்ளது.*

நாம் அப்பத்தையும் பாத்திரத்தையும் ஆசீர்வதிப்பதில்லை, ஏனெனில் அவைகள் ஏற்கனவே இயேசுவின் மரணத்தினால் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளன. ஜெபம் என்பது, இயேசு தமது சரீரத்தையும் இரத்தத்தையும் நமது பாவமன்னிப்பிற்காக அன்புடன் தியாகம் செய்ததற்காகத் தேவனுக்கு நன்றி செலுத்துவதாக இருக்க வேண்டும்.

## பாடல்கள்

இராப்போஜனத்தில் பங்கேற்பவர்கள், இயேசுவின் மீதும் அவரது தியாகத்தின்மீதும் கவனம் குவிக்க உதவும்படி, இராப்போஜனத்திற்கான பாடல்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். சில சபைக்குழுமங்கள் ஒவ்வொரு ஐக்கிய விருந்து ஊழியத்திலும் ஒரே விதமான ஒன்றிரண்டு பாடல் களைப் பாடுகின்றனர். இது அவர்கள் சிந்தனையின்றி பாடும்படி மிகவும் சாதாரணமாக மற்றும் நன்கு அறிந்தவையாக ஆக்கக்கூடும், மற்றும் அவர்கள் அர்த்தமும் இருதயத்தில் உணரப்பட்ட வெளிப்பாடும் இன்றி அவற்றைப் பாடுமாறும் ஆக்கக் கூடும்.

பெரும்பான்மையான பாடல்புத்தகங்களில், இந்த நிகழ்வுக்கு ஏற்ற பாடல்களை அடையாளம் காணக்கூடும்படிக்கு ஒரு பொருளடக்கம் உள்ளடங்கியுள்ளது. இவற்றிற்கு அப்பால், மற்ற புத்தகங்கள், கிறிஸ்துவின் மரணம் மற்றும் பாடுகள் தொடர்பான ஒன்றிரண்டு சரணங்கள் பாடும்படி பாடல்களை உள்ளடக்குகின்றன. இரண்டு அல்லது மூன்று பாடல்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பத்திகளைப் பாடுதல் என்பது ஊழியத்தில் பல்வகையையும் அர்த்தத்தையும் கூட்டக்கூடும். சபைக்குழுமத்திற்கு பழக்கமானவையாக இருந்தால் பயன்படுத்தக்கூடிய சில பாடல்கள் தரப்படுகின்றன:

## வேதவசனங்கள்

கர்த்தருடைய இராப்போஜனத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படும் வேதவசனங்கள் எல்லா வேளைகளிலும் ஒரே ஒன்றிரண்டு வசனங்களாக இருக்கக் கூடாது. வேதவசனத்தின் ஒருபகுதியை அல்லது வேறுபட்ட வசனப்பகுதிகளில் இருந்து ஒரு சில வசனங்களை வாசித்தல் உதவிநிறைந்ததாக இருக்கக்கூடும்.

கர்த்தருடைய பந்தியை அறிமுகப்படுத்துவதற்காக வேதவசனப்பகுதியைத் தேர்ந்தெடுக்கும் நபருக்கு உதவுவதற்காக, திறவுகோல் சிந்தனை அல்லது சொற்றொடருடன், ஏற்புடைய வசனப்பகுதிகள் கீழே பட்டியலிடப் பட்டுள்ளன. சிலவேளைகளில் பழைய ஏற்பாட்டு வசனப்பகுதிகளும் அவற்றைத் தொடர்ந்து அவற்றிற்கு இணையான புதிய ஏற்பாட்டு வசனக்குறிப்புகளும் பயன்படுத்தப்படுகின்றன.

*ஆதியாகமம் 22:18; உபாகமம் 21:22, 23: "தூக்கிப்போடப்பட்டவன் தேவனால் சபிக்கப்பட்டவன்"; காண்க கலாத்தியர் 3:10-16.*

*யாத்திராகமம் 24:5-8: "கர்த்தர் உங்களோடே பண்ணின உடன்படிக்கையின் இரத்தம் இதுவே"; காண்க எபிரெயர் 9:15-18.*

*சங்கீதம் 22:1, 16-18: "என் கைகளையும் என் கால்களையும் உருவக் குத்தினார்கள்"; காண்க யோவான் 19:33-35.*

*சங்கீதம் 34:20: "அவனுடைய எலும்புகளையெல்லாம் காப்பாற்றுகிறார்; அவைகளில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை"; காண்க யோவான் 19:30-37.*

*சங்கீதம் 40:6-8: "உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்"; காண்க மத்தேயு 26:39; எபிரெயர் 10:5-10.*

*சங்கீதம் 69:20, 21: "என் தாகத்துக்குக் காடியைக் குடிக்கக்கொடுத்தார்கள்"; காண்க மத்தேயு 27:45-50.*

*ஏசாயா 53:1-12 (பாவத்திற்காக இயேசுவின் பாடுகள் பற்றிய தீர்க்கதரிசனம்).*

*சகரியா 12:10: "அவர்கள் தங்கள் குத்தின என்னை நோக்கிப்பார்த்து"; காண்க யோவான் 19:34-37.*

*சகரியா 13:6, 7: "மேய்ப்பனை வெட்டு"; காண்க மத்தேயு 26:31-56.*

*மத்தேயு 20:25-28: "அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்."*

*மத்தேயு 26:26-29 (கர்த்தருடைய இராப்போஜனம் ஏற்படுத்தப்படுதல்).*

*மத்தேயு 27:15-54 (சிலுவையில் அறையப்பட்ட காட்சி).*

*மாற்கு 10:32-34: "அவர்கள் அவரைப் பரியாசம் பண்ணி, அவரை வாரினால் அடித்து, அவர் மேல் துப்பி, அவரைக் கொலைசெய்வார்கள்."*

*மாற்கு 14:22-25 (கர்த்தருடைய இராப்போஜனம் ஏற்படுத்தப்படுதல்).*

*மாற்கு 15:16-39 (சிலுவையில் அறையப்பட்ட காட்சி).*

*லூக்கா 18:31-33: "அவரை வாரினால் அடித்து, கொலைசெய்வார்கள்; மூன்றாம் நாளிலே அவர் உயிரோடே எழுந்திருப்பார்."*

*லூக்கா 22:17-20 (கர்த்தருடைய இராப்போஜனம் ஏற்படுத்தப்படுதல்).*

*லூக்கா 23:13-49 (சிலுவையில் அறையப்பட்ட காட்சி).*

*யோவான் 3:14-17: "உயர்த்தப்படவேண்டும்"; காண்க 8:28; 12:32.*

*யோவான் 10:14-18: ''நான் என் ஜீவனை மறுபடியும் அடைந்துகொள்ளும்படிக்கு அதைக் கொடுக்கிறபடியினால்."*

*யோவான் 12:24-33: ''தாம் இன்னவிதமான மரணமாய் மரிக்கப்போகிறாரென்பதைக் குறிக்கும்படி."*

*யோவான் 15:12-14: "ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை."*

*யோவான் 19:1-37 (சிலுவையில் அறையப்பட்ட காட்சி).*

*நடபடிகள் 2:22-41: "அந்த இயேசுவை நீங்கள் பிடித்து, அக்கிரமக்காரருடைய கைகளினாலே சிலுவையில் ஆணியடித்துக் கொலைசெய்தீர்கள்."*

*நடபடிகள் 3:13-21: "ஜீவாதிபதியைக் கொலைசெய்தீர்கள்."*

*நடபடிகள் 5:30-32: "நீங்கள் மரத்திலே தூக்கிக் கொலைசெய்த இயேசுவை ... தேவன் எழுப்பி ..."*

*நடபடிகள் 10:38-43: "அவரை மரத்திலே தூக்கிக் கொலைசெய்தார்கள்."*

*நடபடிகள் 13:26-39: "மரணத்திற்கு ஏதுவானதொன்றும் அவரிடத்தில் காணாதிருந்தும், அவரைக் கொலைசெய்யும்படிக்கு."*

*நடபடிகள் 26:19-32: "கிறிஸ்து பாடுபடவேண்டியதென்றும்."*

*ரோமர் 3:21-26: "கிறிஸ்து இயேசுவினுடைய இரத்தத்தைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் கிருபாதார பலியாக அவரையே ஏற்படுத்தினார்."*

*ரோமர் 5:6-11: "குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார்."*

*ரோமர் 6:1-11: "அவர் மரித்தது, பாவத்திற்கென்று ஒரேதரம் மரித்தார்."*

*ரோமர் 8:31-32: "நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர்."*

*1 கொரிந்தியர் 1:18-24: "சிலுவையைப் பற்றிய உபதேசம் ... இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது."*

*1 கொரிந்தியர் 2:1-5: "இயேசுகிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன்."*

*1 கொரிந்தியர் 10:16-22 (விக்கிரகங்களின் பந்தியல்ல, ஆனால் கர்த்தருடைய பந்தி).*

*1 கொரிந்தியர் 11:17-34 (கர்த்தருடைய இராப்போஜனம் ஏற்படுத்தப்பட்ட நிகழ்வு).*

*1 கொரிந்தியர் 15:1-6: "கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து ..."*

*2 கொரிந்தியர் 5:14-21: "எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க ..."*

*கலாத்தியர் 1:3-5: "நம்முடைய பாவங்களுக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்."*

*கலாத்தியர் 2:20; 6:14, 15: "நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங்குறித்து மேன்மைபாராட்டாதிருப்பேனாக."*

*எபேசியர் 2:11-18: "கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள்."*

*பிலிப்பியர் 2:5-11: "சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி."*

*கொலோசெயர் 1:15-23: "அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி."*

*1 தெசலோனிக்கேயர் 4:14-18: "இயேசுவானவர் மரித்து பின்பு எழுந்திருந்தாரென்று விசுவாசிக்கிறோமே."*

*1 தெசலோனிக்கேயர் 5:4-11: "அவர் நமக்காக மரித்தாரே."*

*1 தீமோத்தேயு 2:3-8: "எல்லாரையும் மீட்கும்பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே."*

*தீத்து 2:11-14: "நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்."*

*எபிரெயர் 2:9-18: "இயேசு மரணத்தை உத்தரித்ததினிமித்தம் மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப்பட்டதைக் காண்கிறோம்."*

*எபிரெயர் 5:7-9: "அவர் மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை*

*மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம்பண்ணி, வேண்டுதல் செய்து, ...''; காண்க மத்தேயு 26:31-46.*

*எபிரெயர் 9:11-14: "தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரேதரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து."*

*எபிரெயர் 9:22-28: ''அவர் தம்மைத்தாமே பலியிடுகிறதினாலே பாவங்களை நீக்கும்பொருட்டாக இந்தக் கடைசிக்காலத்தில் ஒரேதரம் வெளிப்பட்டார்."*

*எபிரெயர் 10:5-23: "அந்த மார்க்கத்தின்வழியாய்ப் பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்குத் தைரியம் உண்டாயிருக்கிறபடியினாலும்."*

*எபிரெயர் 12:1-4: "அவர் ... சிலுவையைச் சகித்து."*

*எபிரெயர் 13:10-15: ''அந்தப்படியே, இயேசுவும் தம்முடைய சொந்த இரத்தத்தினாலே ஜனத்தைப் பரிசுத்தஞ்செய்யும்படியாக நகரவாசலுக்குப் புறம்பே பாடுபட்டார்."*

*எபிரெயர் 13:20, 21: "நித்திய உடன்படிக்கையின் இரத்தத்தினாலே."*

*1 பேதுரு 1:17-23: "குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே."*

*1 பேதுரு 2:4-12: ''மனுஷரால் தள்ளப்பட்டதாயினும், ... ஜீவனுள்ள கல்லாகிய அவரிடத்தில் சேர்ந்தவர்களாகிய நீங்களும் ..."*

*1 பேதுரு 2:21-25: "அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்."*

*1 பேதுரு 3:13-22: ''கிறிஸ்துவும் ... பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்டார்."*

*1 யோவான் 3:16: ''அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே''; காண்க 4:9-11.*

*1 யோவான் 5:4-9: ''இயேசுகிறிஸ்துவாகிய இவரே ஜலத்தினாலும் இரத்தத்தினாலும் வந்தவர்."*

*வெளிப்படுத்தின விசேஷம் 1:4, 5: "நம்மிடத்தில் அன்புகூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி ..."*

*வெளிப்படுத்தின விசேஷம் 5:9-14: ''எங்களைத் தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டு ..."*

*வெளிப்படுத்தின விசேஷம் 7:9-17: "இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள்."*

*வெளிப்படுத்தின விசேஷம் 12:7-11 "ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் ... அவனை ஜெயித்தார்."*

*வெளிப்படுத்தின விசேஷம் 19:11-16: "இரத்தத்தில் தோய்க்கப்பட்ட வஸ்திரத்தைத் தரித்திருந்தார்."*

## தொகுப்புரை

*கர்த்தருடைய இராப்போஜனத்தைக் கடைப்பிடிப்பதில் வழிநடத்துபவர்கள்,*

தாங்கள் கூறுவது மற்றும் செய்வது ஆகியவற்றைப் பற்றித் தீவிர சிந்தனையைக் கொண்டிருக்கவேண்டும். ஏற்புடைய பாடல்கள் மற்றும் வேதவசனப் பகுதிகளை கவனநிறைவுடன் தேர்ந்தெடுப்பதன் மூலமும் ஊழியத்திற்குப் பொருத்தமான ஜெபங்களை ஏறெடுப்பதன் மூலமும் சிந்தனைகளை முன்வைப்பதன் மூலமும் அவர்கள், இயேசுவின் சரீரம் மற்றும் இரத்தம் ஆகியவற்றின்மீது சபைக்குழுமத்தினர் கவனம் குவிக்க உதவ முடியும். இயேசு கர்த்தருடைய இராப்போஜனத்தை ஏற்படுத்தியபோது அவரது விளக்கங்களில் இருந்த சுருக்கத் தன்மையை ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். அவர் நீண்ட உரை நிகழ்த்தவில்லை. கேட்பவர்களின் மனதை ஈர்ப்பதற்காக நீண்ட உரைகளை ஏற்படுத்துதல் அல்ல, ஆனால் சிலுவையில் அறையப்பட்ட நமது கர்த்தர் மீது கவனம் குவிப்பதற்கு சபைக்குழுமத்திற்கு உதவுதல் என்பதே இலக்காக இருக்க வேண்டும். உறுப்பினர்களில் பெரும்பான்மையானவர்கள், நீண்ட விளக்கம் இன்றியே கர்த்தருடைய இராப்போஜனத்தைப் பற்றிப் புரிந்துகொள்ளுதலைக் கொண்டிருப்பார்கள். கவனக்குவிப்பு என்பது முன்வைப்புரையின் சுருக்கத் தன்மை அல்லது நீண்ட தன்மை ஆகியவற்றின்மீது இருக்கக் கூடாது, ஆனால் ஆராதிப்பவர்கள் இராப்போஜனத்தின் அர்த்தம் மற்றும் ஆவிக்குரிய மதிப்பு ஆகியவற்றைப் புரிந்துகொள்ள உதவ வேண்டும்.